டாக்டர். உ. வே. சாமிநாதையர்
நூல் நிலையம்,
சென்னை - 600090.

ACC. No. 2467

அறிவு விளக்கம்.

ARIVU VILAKKAM.

ஓர் மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை.

"எப்பொருள் யார்யார் வாய்க்கேட்பினும்
அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு."

புத்தகம்—I. } தை மீ 29-உ. { இலக்கம்—1.

விஷயங்கள்.

அறிவுவிளக்கம்.— } பத்திராதிபர்.
...ண்ணப்பம்.— }
...ற்கூறு நூல்.—கவிராஜ, வி. அ. நமசிவாயப்பிள்ளை பி. ஏ.
...ல்வநூல்.—கே. ஜி. சேஷய்யர் பி. ஏ. பி. எல்.
...தியவதி.—லட்சுமணபிள்ளை பி. ஏ.
...ல்வியாள்.—ஏ. கே. கிருஷ்ணய்யங்கார்.
...மவைகள்.—பி. வி. கோலப்பபிள்ளை பி. ஏ.
மாசாரக்குறிப்புகள்.

பத்திராதிபர்.—வள்ளல், சோ. சிவஞானதேசிகர்.

நாகர்கோவில்:
நாஞ்சிநேசன் பிரஸில் பதிப்பிக்கப்படுகின்றது.

1901.

...சந்தா ரு. 2—0—0. சஞ்சிகை ரு. 0—4—0.

நமது பத்திரிகா போஷகர்கள். (Patrons)

ஸ்ரீமான் தி. வேதாத்ரீசதாச முதலியார் அவர்கள்,
ஐக்கோர்ட்டு பென்ஷன் ஜெட்ஜ்,
திருவனந்தபுரம்.

" T. பொன்னம்பலம்பிள்ளை அவர்கள்,
Police Assistant Superintendant,
திருவனந்தபுரம்.

" P. தாணுபிள்ளை அவர்கள், M. A., F. M. U.
திருவனந்தபுரம்.

" S. கணபதிப்பிள்ளை அவர்கள்,
உண்டியல்வியாபாரம்
திருவனந்தபுரம்.

" B. C. வள்ளிநாயகம்பிள்ளை அவர்கள்
High Court Registrar,
திருவனந்தபுரம்.

" மு. முத்துராமலிங்கம்பிள்ளை அவர்கள்,
மகாராஜாசர்வகலாசாலை
தமிழ்ப்பண்டிதர்
திருவனந்தபுரம்.

" M. R. கிருஷ்ணராவ் அவர்கள்,
Registration Director,
திருவனந்தபுரம்.

" கெ. எஸ். கிருஷ்ணசாமிஐயர் அவர்கள்,
உண்டியல் வியாபாரம்
திருவனந்தபுரம்.

" எஸ். திரவியம்பிள்ளை அவர்கள்,
Unjal Superintendant,
திருவனந்தபுரம்.

" எஸ். சாமிஐயங்கார் அவர்கள்,
திருவனந்தபுரம்.

" ஐயப்பன்பிள்ளை அவர்கள்,
Inspector of Schools,
Southern Range
திருவனந்தபுரம்.

" பரமேசுவரன்பிள்ளை அவர்கள்,
பென்ஷன் தாசில்தார்
திருவனந்தபுரம்.

" இராகவாச்சாரியார் அவர்கள் B. A.
தகசில்தார்
அகஸ்திசுவரம் தாலூக்.

(கடைசி கவரின் உட்பக்கம் பார்க்க.)

R011-92
1169
2467
டாக்டர். உ. வே. சாமிநாதையர்
நூல் நிலையம்,
சென்னை-600090.
1-344

அறிவு விளக்கம்.

ARIVU VILAKKAM.

ஓர் மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை.

"எப்பொருள் யார்யார் வாய்க்கேட்பினும்
அப்பொருண் மெய்ப்பொருள் காண்பதறிவு."

புத்தகம்—I. | தை ௴ 29-௳. | இலக்கம்—1.

நம் இந்தியாசக்கரவர்த்தி.

இதுவரை வேல்ஸ்(Wales) இளவரசராயிருந்து இம்மாதம் 11-௳ (~~நவம்பர் 23-௳~~) பிரிட்டிஷ் ஐக்கிய நாடுகளுக்கு அரசராயும் இந்தியாவுக்கும் குடியேற்ற நாடுகளுக்கும் சக்கரவர்த்தியாயுமுள்ள ஸ்தானங்களைவகித்த ஏழாவது எட்வர்ட் (Edward VII) என்பவர் 1841-ம் ௵ நவம்பர் மாதம் 9-௳ பிறந்து டென்மார்க்கு(Denmark)அரசரின் குமாரத்தியாகிய அலக்ஸாண்டிரியா (Alexandria) என்ற இப்போதைய மகாராணிப்பெண்மணியை 1863-ம் ௵ மார்ச்சுமாதம் 10-௳ மணமபுரிந்திருக்கிறார். இவரது குமாரரில் இப்போதிருக்கிற டியூக் அவ் யார்க்(Duke of York) என்பவர் இப்போது இளவரசராகயிருக்கின்றனர். இவர் 1891ம் வருடத்திலும் இவரதுபிதா 1875-ம், வருடத்திலும் இந்தியாவில் விஜயமாயிருந்தகாலங்களில் சாந்தகுணத்தையே பூஷணமாகக்கொண்ட இந்தியர்களது இணையற்ற ராஜவிசுவாசத்தை நேரிற்கண்டறிந்திருக்கின்றனர்.

இளவரசர்கள் ராஜாங்க விஷயங்களில் தலையிட உரிமைபெற்றிராவிடினும், நம் சக்கரவர்த்தி இளவரசராயிருந்தகாலத்தில் தேசவிஷயங்களை ஆராய்ந்து 'கொடையளி செங்கோல் குடியோம்பல்' ஆகிய வேந்தர்க்கவசியமாம் நான்கு பெருங்குணங்களையும் உடைத்தாயிருக்கின்றாரென்பதைப் பலகாலங்களிலும் நன்கு விளக்கியிருக்கின்றாரென்பது யாமனைவரும் நன்றாயறிந்ததே. இதற்கு அநுசரணையாகவே இந்நவம்பர்மாதம் 23-உ யன்று மந்திராலோசனை சபையாரிடம் பேச கேட்டபொழுது நம் சக்கரவர்த்திபேசிய அநுக்ரஹவார்த்தைகளிற் சிலவற்றை இங்கு மொழிபெயர்த்தெழுதியிருக்கின்றாம்.

"நம தாயாரது அரசாட்சி முறையினைத்தொடர்ந்துபற்றியே செங்கோல் செலுத்தி, நமது வாணாளளவும் நம்குடிகளின் நன்மைக்காகவும் விருத்திக்காகவும் வேலைசெய்து எல்லா விஷயங்களிலும் அரசவரம்புகடவாத அரசனாயிருக்கவும், நம்முழுக்கவனத்தையும் பலத்தையும் இராஜாங்க விஷயத்திற்செலுத்தவும் நிச்சயித்திருக்கிறோம். நம் வேலைகளில் பார்லிமென்றுமகாசபை (Parliament)யும் ஆங்கிலேய ஜனங்களும் நமக்குஉற்றதுணையாக நின்று உதவி செய்யுமென்பதே நமது நம்பிக்கை."

இப்பெருநிலமன்னர் கருதியவாறே, அரசநெறியிற்சிறிதும் பிழையாது, தம் பட்டமகிஷியோடு பல்லாண்டுபல்லாண்டினிதுவாழவும், மன்னர் குழாங்கள் இவரது அன்பு மிக்க ஆணைகடவாது நிற்கவும், இவரது குடிகளாகிய நாமும் தற்காலமனுபவித்துவருகிற பஞ்சமுதலிய பல்வகைத்துன்பங்களினின்றும் இவரது தண்ணளி மிகுதியால் நீங்கி வறுமைக்கடலினின்றுங் கரையேறி, என்றும் இன்ப நலவாழ்க்கையைப் பெற்றுச் செழித்தோங்கவும், எல்லாம் வல்லகடவுளை இறைஞ்சுவாம்.

டாக்டர். உ. வே. சாமிநாதையர்
நூல் நிலையம்,
சென்னை-600090.

அறிவு விளக்கம்.

"அறிவு விளக்கம்" என்பது அறிவை விளக்குவது எனப் பொருள்தருவதால இப்பத்திரிகைக்குக் காரணச்சிறப்புப் பெயராம். அறிவு என்பது இவ்விடத்தில் செவி, கண் முதலியனவற்றைக் கருவியாகக் கொண்டு உணரும் பிரபஞ்ச அறிவினை விளக்கும். நாக்கால் நுகரப்படும் அறுசுவை உணவு உயிர்க்குவீடாகிய உடலை வளரச்செய்து சில காலவரையும் நிலைநிறுத்துவது போலல்லாமல் 'செவி வாயாக நெஞ்சு களனாக' நுகரப்படும் சொல் உயிர்களின் அறியாமையைக் கெடுத்து அறிவை வளரச் செய்து இன்பவாழ்க்கையைத் தந்து என்றும் நிலைபெறுவிப்பதோர் கருவியாயிற்று.

இனி அப்பிரபஞ்ச அறிவாகிய விரிந்த பரப்பினுள் இப்பத்திரிகையில் வெளியிடப்படுவன, இந்திய ~~ஆங்கிலேய~~ தத்துவ சாத்திர அறிவுவிளக்கமும், ஆங்கிலத்திலுள்ள தத்துவசாத்திர அறிவு விளக்கமும், ஆங்கிலத்திலுள்ள இயற்கைச் சாத்திர அறிவு விளக்கமும, மதவுண்மை அறிவு விளக்கமும், உண்மை முறையில் ஆராயப்பெற்ற சரித்திர அறிவுவிளக்கமும், தமிழ் இலக்கண இலக்கிய ஆராய்ச்சி அறிவு விளக்கமும், கைத்தொழில் வாணிபம் முதலிய ஜீவனோபாய கலை அறிவுவிளக்கமும், சித்திரம் சிற்பம முதலிய சிறந்த உயர்தரக் கலை அறிவுவிளக்கமும், ஜனசமூக நன்மை நாட்டத்திற்குரிய அறிவுவிளக்கமும், அரசமுறை அறிவுவிளக்கமும், பற்பல நாட்டு அரிய பெரிய செய்தி அறிவு விளக்கமும் பிறவுமாம். இவற்றிற்கு வேறாக பல பிரசங்கசாரங்களும் தர்க்கங்களும் வெளியிடப்படும். மேலே குறித்த விஷயங்கள் பெரும்பான்மையும தொடர்ச்சியாகவே விரித்தெழுதப்படும். ஆகலால் நமது கையொப்பக்காரர்களாகும அறிவாளிகள் முதற்பத்திரிகை தொடங்கி முறையே வாங்கி வாசித்துவருதல் மிக நன்மையாம்.

விண்ணப்பம்

செந்தமிழ்ச்செல்வர்காள்,

நம தாய்மொழியாகிய தமிழ் மிகப் பழமையாகியதொருதனிமொழியே என்று தமமொழியெனச்சிறிதும் பற்றுவையாத அயல்நாட்டாரும் வாய்கூசாது இக்காலத்தும் கூறத்துணிவரேனும் நம் அருமைத்தமிழ்ச்செல்வி தற்காலம் தன் நிலைதளர்ந்து தடுமாறும் நிலையை அறியாதார் யாவர்? அறிந்தும மனம் கலுழாதார்யாவர்? இந்நிலையை இச்செல்வி எய்துதற்குக் காரணம் யாதெனில் முற்காலத்தில் சேர சோழ பாண்டிய அரசர்களது வள்ளன்மைப்பெருக்கால் தமிழரசி மகிழ்ச்சியில் திளைத்தாள். அவர்கள் நாளடைவில் ஒடுங்க மடாதிபதிகளும் ஒருகாலத்தில் தமிழ்த்தெய்வத்தின் தற்கால நிலைக்கேற்ப பற்பல அரும்பணி குயிற்றி அணிவித்து ஒருவாறு விளக்கமுறக்கண்டு களித்து பெரும்புகழ் படைத்தார்கள். அவர்கள் கதியும் பெரும்பான்மை உலக இடம்ப விருத்தியிற் செல்லவே நம்மோடு நடை, உடை பாவனை, பாஷை மதம் முதலியவற்றால் முற்றும் மாறுபட்டிருப்பினும் கருணையும் நீதியும் மிக்க நம் ஆங்கில அரசாங்கத்தாரது உதவி (ஆங்கிலேய பாடசாலைகளிற் சிறிதுநேரம் தமிழ்கற்பித்தல் முதலியன) இவ்வளவேனும் இன்றேல் செல்வியின்கதி யாதாய் முடியும்? இத்தகைய நிலைவாய்ந்த நம்மொழியை வளர்த்துதற்கு நம்மிடையில் பலகல்வி அறிவாளர் வாய்மையிற் கண்டறிந்த பல முதற் கருவிகளுள் பத்திரிகையும் ஒன்றென நன்கு நிச்சயிக்கப்பட்டிருக்கின்றது. எனினும் இந்நாட்டில் உயர்தரக்கல்வி அறிவாளர்க்குங்கூட இன்னும்பத்திரிகையின் பயன் இத்தன்மைத்தென அறிந்துகொண்டபாடில்லைஎன அறிவிற் சிறியயானும் வாய்கூசாது கூறத்துணிவதுஎன்னெனின்இப்பூவுலகில்தமிழ்வழங்கும்மக்கள்1891-ம் வருஷத்துஜனசங்கியைகணக்கின்படி ஏறக்குறைய 145-லட்சம் இருந்தும் எத்தனை தமிழ்ப் பத்திரிகைகள் நடைபெறுகின்றனவெனக் கணக்கிடப்புகின் நன்கு விளங்கும். எனினும் இவ்விடையில் பொதுநோக்கிற் சிறந்

த கனவான்களாகிய கல்விவான்கள் இவ்வறச்செயலை நடத்துதற்
கு முற்படாதிருக்கவில்லை. அவருள் பல இடையூறுகளுக்கும்
எஞ்சி நிற்கும் சிலரும் ஆதரிப்பாரது குறையால படும்பாடு
இனையதென எவர்க்கும் இனிது விளங்கும். இவ்வரலாறுகளை
ஒருவாறு அறிந்துகொண்டயானும் எனது வெள்ளறிவின் பெற்
றியால் இப்பத்திரிகையை நடத்தக்கருதிச் சிந்தித்து சித்தம் ஊச
லாடும்பொழுது எனதுநண்பர்கள் தேற்றத்தேறி என்னைத் தமது
மாசிக நிபந்தக்கொடை வண்மையால் ஆதரித்துவரும் ஸ்ரீமான்
தீ. வேதாத்திரிசதாச முதலியார் அவர்களிடம்தெரிவிககஅவர்கள் அ
றங்கள் பலவற்றுள்ளும் தலைமைபெற்ற நல்லறமே இஃது எனி
னும் தற்கால நிலை ஆதரிப்பார் மிக்கின்மையால் இவ்வறச்செயல்
செய்து போதருங்கால் வரும் கஷ்ட நஷ்டங்கள் பலவற்றையும்
திரட்டித்தெரித்ததுமன்றி “எம்மால் இயன்ற அளவில் உதவிக
ள்செய்யச் சித்தமாயிருக்கின்றேம்” என உறுதி அளித்தார்கள்.
உடன் பகிரங்கத்தில் பலகனவான்களிடத்திலும் அறிவிக்க அவ
ர்களிற் சிலகனவான்கள் எனதுவேண்டுதற்கிசைந்து இயன்ற
உதவிகள் செய்ய வாக்களித்து போஷகர்கள் (Patrons) ஆகவும்
சந்தாதாரர்களாகவும் இணங்கினதுமன்றி சிலர் இயன்ற அள
விற்கதிகமாகவே தங்கள்எவ்வளவோ வேலைநெருக்கின் இடையி
லும் சிரமம் பாராட்டாது வேண்டும் பல உதவிகள் செய்து
கொண்டே வருகின்றார்கள். யான் இம்முயற்சியிற் குன்றாது
நிலைநிற்கச்சிறிதும் தடையின்றி இடந்தருமாறு அவர்கள்மேலா
ன தயாள குணத்தை இன்னும்வேண்டி இறைவனை இறைஞ்சா
நின்றேன்.

இனி இவ்வுதவிகள் நிரம்பப்பெற்றேனாயினும் இவ்வுதார
சீலர் பலர்க்கும் முட்டின்றி இவ்வுயர்தர வித்தியாநுபாலனச்
செந்தமிழ்ப் பத்திரிகையை முறையே பதிப்பித்து வழங்கிவரு
தற்கு தாம் தாம் கைப்பொருள் பல செலவிட்டு வருந்திக்கற்று
உசாவிக்கேட்டு ஆராய்ந்தறிந்த அரும்பெரும் விஷயங்களை சலிப்
பின்றி என்றும் வழங்கி ஆதரித்தற்குத் தயைபுரியுமாறு நேரி
லும் கடிதவழியாலும் விண்ணப்பித்தேன். அவர்களில் மிக்

விண்ணப்பம்.

கோரும் இசைந்து நேரிலும் கடிதவழியாலும் உறுதி வழங்கினதுமன்றி கல்வியறிவாற்றல் பெரிதும் படைத்த தமது நண்பர்களுள் சிலரை விஷயதான வள்ளல்களாக்கித்தந்தனர். இன்னும் பலரை ஆக்கித்தரற்கும் இசைந்தனர். உயர்தரக் கொடை வள்ளல்களான இத்தகைய மேம்பாடு வாய்ந்த வித்வசிகாமணிகளே இப்பத்திரிகைக்கு ஆசிரியர்களாதற்குத் தகுதியுடையராவரர்கள் எனினும் அவர்கள் ஆஞ்ஞையைப்பெற்று இப்பெருந்தொழிலில் தலைநிற்றலரல் கடையனாகிய என்னையும் இப்பத்திரிகையையும் இக்கனவான்கள் முதலிய பலரும் என்றும் ஆதரிக்கவும் நாம் யாவரும் இன்பநல் வாழ்க்கையில் என்றும் நிலைத்துநிற்கவும் எல்லாம் வல்லகடவுளை நாம் வணங்குவாம்.

“கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்
டென்னாற்றுங் கொல்லோ வுலகு.”

இப்பத்திரிகா போஷகர்கள் (Patrons) இரண்டு பத்திரிகைக்குரிய வருடச்சந்தாவினின்றும் அதாவது ஐந்து (5) ரூபா தொடக்கம் தங்கள்தங்கள் மனப்பாங்கின்படி குறிப்பிடுகின்ற தொகையை முற்பணமாகவே உபகரிக்கவேண்டும். ஆனால் பத்திரிகையின் வளர்வு தேய்வுக்கேற்ப தங்கள் வருஷநிபந்த பணத்தை தங்களிஷ்டப்படி கூட்டவும் குறைக்கவும் தக்கதே. இவர்களுக்கு அனுப்பப்படுகிற பத்திரிகைகளுக்கு பிரத்தியேகம் விலைவாங்கப்படமாட்டாது. இவர்கள் உபகாரவண்மை மாட்சிகொண்டே இப்பத்திரிகையை இவ்வளவுவிரைவில் முட்டின்றி நடத்தற்கு முற்பட்டேன். இனி நமது பத்திரிகை பெறும் சந்தாதாரர்களொவ்வொருவரும் முற்பணமாகவே அனுப்பித்தரவேண்டும். கடிதம், விஷயம், பணம் முதலியன யாவும் பத்திரிகாசிரியருக்கே அனுப்புதல் வேண்டும்.

டாக்டர், உ. வே. சாமிநாதையர்
நூல் நிலையம்,
சென்னை-600090.

A.A.B.A
2467.

உ

உடற்கூறு நூல்.

முகவுரை.

கல்வி கேள்விகளிற் சிறந்த நமது ஆன்றோர்களும் மூதாதையர்களும் அறுவகைப் பிறப்புகளுள் மானுடப் பிறப்பே மேலானதென்று பன்முறை பலவிடங்களிற் கூறியுள்ளார். அவ்விதங் கூறியதற்குக் காரணமென்னையெனின், மற்றைய ப்ராணிகளிடத்திலில்லாத, நன்மையையும் தீமையையும் பிரித்தறியக் கூடிய பகுத்தறிவு ஒன்றுமே. பகுத்தறிவை ஆங்கிலர் ரீசன் (reason) என்று கூறுவர். இப்பகுத்தறிவிற் கிருப்பிடம் நம்மிடத்திலிருக்கிற மூளையே (brain) ஆதலின், நமது மூளையானது நம்மை மற்றப் பிராணிகளினின்று வேறுபிரிக்கிற ஒரு முக்கியமான அங்கமென்ப தேற்படுகின்றது. இம்மூளைக்கிருப்பிடம் நமது சரீரம். ஆகவே, நமது சரீரத்தின் அவயவக் கூறுபாடுகளையும் அமைப்பையும் இயல்பையும் பற்றி ஒவ்வொருவரு மறியவேண்டியதவசியமென்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோலத் தெளிவுறும். இவ்விடயங்களைக் கூறுஞ்சாத்திரத்திற்கு உடற்கூறு சாத்திர (physiology)மென்றுபெயர். இச்சாத்திரம் வைத்திய சாத்திரம் படிப்பதற்கு இன்றியமையாத ஓர் கருவிநூலாம். உடற்கூறு சாத்திரத்தை ஆங்கிலத்திற் பலவித்வான்கள் தெளிவாய் அநேக புத்தகங்களாய் வெளியிட்டிருக்கிறார்கள். ஆனால் நம்மிந்தியர்களுக்குள் இச்சாத்திரம் எக்காலத்திலுமிருந்ததாய்க் காணப்படவில்லை. தற்காலத்திய நாட்டுவைத்தியர்களுக்கு உடற்கூறும் அமைப்பும் இலேசமுந் தெரியாதென்பது யாவருமொப்புக் கொள்ளக் கூடியகாரியம். இது காரணத்தினாற்றான் தற்காலத்திய ஆங்கிலத் தேர்ச்சியுள்ளோர்களும் ஆங்கில வைத்தியர்களும் நாட்டு வைத்தியர்களை நிந்திக்கிறார்கள். ஆனால், யான் நாட்டு வைத்தியர்களையும் அவர்களது சாத்திரத்தையும் நிந்திக்கவோ, வேறெவ்வகையானுங் குறைகூறவோ சற்றுந் துணிந்தவனல்லன். ஆங்கில வைத்தியர்களாற் குணமாக்கக்கூடாத சிலவியாதிகளைக் குணமாக்கக் கூடிய சிலநாட்டு வைத்தியர்களிருக்கிறார்களென்பது ஆங்கில வைத்தியர்களும் ஏனையோர்களுமொப்புக்கொள்ளக்கூடிய காரியமே.

அஃதன்னணமிருக்க அவர்களது வைத்தியசாத்திரம் மெய்யல்லவென்பதெவ்விதமொக்கும்? ஆயினும், அவர்கள் உடற்கூறுசாத்திரம் இலேசமுந் தெரிந்தவர்களல்லவென்று சற்றுமஞ்சாது திண்ணமாய்க்கூறலாம். உடற்கூறுசாத்திரந்தெரியாதவர்கள் வைத்தியசாத்திரத்தில் வல்லவர்களெனக் கூறுவது பொருந்துமோவென்ற சங்கையுண்டாகும். அவ்விதம்பொருந்தியிருப்பதற்குக் காரணமுண்டு. முற்காலத்தில் நாட்டுவைத்திய சாத்திரங் கண்டுபிடித்தவர்கட்கு உடற்கூறுசாத்திரமுந் தெரிந்தேயிருக்கவேண்டுமென்பது திண்ணம். கெடிகாரத்தின் யந்திரக்கருவிகளையும் அவைகளினமைப்பையுமறியாதானொருவனுக்கு ஓர்கெடிகாரத்திற்குச் சீர்கேடுவருங் காலத்தில் எவ்விதஞ்சீர்திருத்தஞ்செய்ய முடியாதோ அதுபோல உடற்கூறையறியாதானொருவனுக்கு பிணியைத்தீர்க்கவு முடியாதென்பது எளிதிற புலப்படும். நமது முன்னோர்கள் உடற்கூறை யோர் நூலாக எழுதிவையாத குறையினாலோ, அல்லது அவர்கள் எழுதிவைத்து அவர்களுடைய சந்ததிகளாகிய நமக்குக்கிடையாத பாக்கியக்குறையினாலோ தற்காலத்தில் நம்மிந்தியர்களுக்குள் உடற்கூறுசாத்திரமில்லை. பலவிடங்களிலுமுள்ள பலவிதமான கெடிகாரங்கட்குப் பலவிதசீர்கேடுகளுண்டாயினும் கெடிகாரயந்திரங்களையறிந்தானொருவன் எவ்விதஞ்சீர்திருத்தஞ்செய்கிறானோ அதுபோல நமது நாட்டுவைத்தியர்களும்உடற்கூறுசாத்திரமுந்தெரிந்தவர்களாயிருப்பின் எவ்விதவியாதிகளையுந் தணப்படுத்துவார்களென்பதிற் சற்றுமையமில்லை. நாட்டு வைத்தியர்களுக்கு இச்சாத்திரந்தெரியாததால் வருந்தீங்குகள் பலவுள அவைகளைக் கூறப்புகின் விரியுமாதலால் விரிவஞ்சிவிடுத்தனன். ஆகையால் அவர்களுக்கு இச்சாத்திரஞானமவசியமென்பது பெற்றாம். வைத்தியர்களல்லாதவர்கட்கும், தங்களுடலின் கூறுகளையறிந்து வியாதிவாராமற் காத்தற்கு இச்சாத்திரஞானமவசியம். புகைவண்டி யந்திரங்களையறிந்தவனே அவ்வண்டியைச் சரியாய் நடத்துவனென்று கூறவும் வேண்டுமா?

நமதுநாட்டில், சுகாதாரமென்னுஞ் சுகந்தமேறுமையப்பெறாத வீடுகள் பலவுளவென்பதூஉம், அதினாலவ்வீடுகளில் "காலரா" என்னுங்காலன் கால்கூசாதுசென்று அவைகளைப்பாழாக்கி வருகிறானென்பதூஉம்விவேகிகள்யாருமுணரக்கூடிய விஷயமல்லவா? அந்தோ! இப்பரிதாபமான விபத்துக்கு முக்கியகாரணமென்னை? காரணங்கள் பலவுளவேனும் நம்முடலியல்பை யறிந்து அதற்குத்தக்க காற்று, உணவு, பானமுதலியவற்றையாட்கொள்ளாதது மொருகாரணந்தானென்பதை மறுக்க யாராவது துணிவார்களா?

டாக்டர் உ. வே. சாமிநாதையர்
நூல் நிலையம்,
சென்னை-600090.
9

ஆங்கில உடற்கூறுசாத்திரங்களின் கருத்துக்களையோ, அவைகளின் மொழி பெயர்ப்பேயோ கூறுந்தமிழ் நூற்கள்தற்காலத்திலிருக்கிறதாகக் காணப்படாததால் தமிழர்களனைவர்கட்கு முபயோகமாம்பொருட்டு ஆங்கில உடற்கூறு சாத்திரங்களின் கருத்துக்களாகிய அறிவை அறிவிற்சிறியேனாகிய யான் "அறிவுவிளக்க"த்தின் வாயிலாய் விளக்கிக்காட்டத்துணிந்தனன். யான் கூறும்விடயங்களிலேதேனுங் குற்றங்குறைகளிருக்குமாயின், அவைகளை விளக்குபவனுடைய குற்றமேயன்றி விளக்கினுடைய குற்றமல்லவென்று கொண்டு அறிவிற்பெரியோர்கள் என்னை மன்னிக்குமாறு பிரார்த்தித்துக்கொள்ளுகிறேன்.

முதலாவது அத்தியாயம்.

நூன் முகவுரை.

நம்முடையசரீரம் இடைவிடாது ஏதானுமொரு வேலையைச்செய்து கொண்டிருக்கிறது. நடத்தல், ஓடல், உதரார்த்தத்தினிமித்தஞ் செய்யப்படுஞ் சகலவேலைகள் முதலிய உறுப்புகளின் அசைதல், மூளையானூன்றி யாலோசித்தலாகிய இவைபோல்வன சரீரத்தின் வேலைகளாம். நாம் அயர்ந்து நித்திரைசெய்யும்போதும் நமதுசரீரம் வேலைசெய்யாமல் ஒழிந்திருக்கிறதில்லை. அயர்ந்து நித்திரைசெய்பவனுடைய இடதுமார்பின்கீழ்ப்பக்கத்தில் நம்முடையகாதைவைத்துக் கேட்போமாறு "டிக், டிக்" என்ற ஒரு சப்தம்கேட்கும். அல்லது நம்முடைய கையை அந்தவிடத்திற்வைத்துப்பார்த்தாலும் அப்பாகம் எப்போதுந்துடித்துக் கொண்டிருப்பதாய்ப் புலப்படும்.

இச்சப்தம் இருதயத்திலுள்ளஇரக்தம் இரக்தக்குழாய்களில் விழுவதாலுண்டாகின்றது. இச்சப்தம் நிற்கும்போது பிராணனும் நின்றுவிடுமாகையால் இருதயம் இரவிலும் பகலிலும் இடைவிடாது நாம்பிறந்த நிமிடமுதல் இறக்குநிமிடம்வரை சப்தித்துக்கொண்டிருக்கும். இருதயத்தின் வலமிடமாகிய விருபக்கங்களிலுமுள்ள சுவாசப்பைகளும் பிராணனுக்கு இன்றியமையாத அவயவங்களாகும். இக்காரணத்தினால்,

இருதயம், சுவாசப்பைகளாகிய விரண்டு கால்களையும் ஆதாரமாகக் கொண்டு பிராணன் நிற்கின்றதெனக் கூறுவர். சரீரமானது இவ்விதம் பலவிதமான வேலைகளைச்செய்வதால் அதனின்றும், மூத்திரம், மலம், வியர்வை முதலிய கழிவுகள் தினசரி வெளியிற்போகின்றன. இக்கழிவுகளாற் சரீரமெலிதற்கிடமுண்டாம். அவ்விதஞ்சரீரம் மெலிவடையாதிருப்பதற்குத்தான் நாம் உணவு, பானம், சுத்தாகாயமுதலியவற்றை யுட்கொள்ளுகிறோம். ஆகவே சரீரத்தில் வரவுங்கழிவு மிருந்துகொண்டேயிருக்கிறது. கழிவிற்குத்தக்க வரவில்லாவிடின் சரீரத்திலுள்ள தசைமுதலியவற்றையே யுபயோகித்து அவ்வவ்வுறுப்புகளின் வேலைகள்தடைபடால் நடந்துகொண்டிருக்கும். அவ்விதங் கொஞ்சக்காலம் நடப்பின் சரீரமெலிந்து மரணஞ் சம்பவிக்கும். ஒரு நீராவியந்திரஞ் செய்யப்பட்ட வேலையினளவிற்கும் அதினாலுண்டாகு முஷ்ணத்திற்குந் தக்க விதத்தில்அதற்கு விறகுகொடுப்பது ஆவசியகமாயிருப்பதுபோல சரீரத்தின்வேலைக்குத் தக்கவிதத்தில் அதற்கு ஆகாரமுதலியகொடுப்பது ஆவசியகம். இதுகாறுஞ் சரீரமாகிய யந்திரத்தின் பொதுக்குணங்களை யறிந்தோம். இனி யதன் அமைப்பைப் பார்ப்போம்.

மனிதனுடைய சரீரமானது, தலை, முண்டம் (trunk), அவயவங்கள் (கைகால்கள்),எனமூன்றுபிரிவாகப் பகுக்குந்தன்மையையுடையது முண்டமானது, மார்பு, வயிறு என விரு பகுதியினையுடையது. மேலுள்ள அவயவங்களுக்குக் கைகளென்றும் கீழுள்ள அவயவங்களுக்குக் கால்களென்றும் பெயர். இவ்விருவகை யவயவங்களுக்கும் அதிக ஒற்றுமைப்பாடுண்டு. தோளிலிருந்து முழங்கைவரையுள்ள பாகத்திற்குச் சரியாய் இடுப்பிலிருந்து முட்டுவரையுள்ள தொடையும், முழங்கையிலிருந்து மணிக்கெட்டுவரையுள்ள முன்கைக்குச்சரியாய் முட்டிலிருந்து கரண்டைவரையுள்ள காலும், மணிக்கெட்டுக்குச்சரியாய் கரண்டையும், உள்ளங்கைக்குச் சரியாய் பாதமுமென முறையே அவைகள் பிரிக்கப்படுந்தன்மையுள்ளன. இவ்விரு அவயவங்களும் ஒரே எண்ணிக்கையுள்ள எலும்புகளாற் சேர்க்கப்பட்டுள்ளன. ஆகையால், சரீரத்தை யதன் முன்பாகத்திற்கும் பின்பாகத்திற்கும் மத்தியில் சிரசிலிருந்து மூக்கின் வழியாகப் பிளப்போமானால் அவ்விதங் கூறுசெய்யப்பட்ட விரண்டு பாகங்களு மேறக்குறைய ஒன்றுபோலவே யிருக்குமென்பது மேற்கூறியதனாற்றெரியவரும்.

செல்வநூல்.

I.

தொன்றுதொட்டுத் துறவறநெறியிலேயே துணியும் சுபாவமுள்ளவர்களாகிய நமது நாட்டார், வேதாந்த ஆராய்ச்சியே வீட்டுப்பேறளிக்கும் ஆற்றலுடையதென்று அபிப்பிராயங்கொண்டு, இம்மைக்குரியனயாவையும் இகழ்ந்து வந்தனர். இன்பம் இசையுந்தோறும் அதனின்னாமை நோக்கி, இத்துறவிகள் இன்பத்தின் துணைக்கருவியெனக்கொண்ட செல்வத்தை பலவாறாகப்பழித்து, 'செல்வமொன்றுண்டாக வைக்கற்பாற்றன்று' என்று முற்படக்கூறினவர், அதைப்பாமரர்கள் எளிதில் ஒப்பாரெனப்பயந்தோ வேறியாது காரணம்பற்றியோ, பிற்பட செல்வத்தை உள்பொருளிலொன்றாகக்கருதின், அது 'அகடுறயார்மட்டும் நில்லாது' சகடக்கால்போல் சுற்றுவதால், அதன்மீது அபிமானமடைதல் புல்லறிவாளர்க்கும் பொருந்தாதென்று விளக்கிக்காட்ட

> ஈட்டலுந்துன்பமற்றீட்டிய வொண்பொருளைக்
> காத்தலுமாங்கே கடுந்துன்பங் காத்தல்
> குறைபடிற்றுன்பங் கெடிற்றுன்பந்துன்பக்
> குறையதிமற்றைப்பொருள்

எனவும் புகட்டினர். மூத்தோர் சொல்லும் வார்த்தை அமிதர்மன்றோ? அவர்களிட்ட ஆணையை நாம் மறுத்து நடத்தல் ஏற்றதன்று. உலகிலுள்ளவரி யாவரும் செல்வத்தையிகழ்ந்தனராயின் உயிர்வாழ்க்கைதான் எவ்விதம் சாத்தியமாகும். அன்றியும் இன்மையின் வருந்துவோர்க்கு அவர் பிறந்தவமிசமும் அவரது கல்வியும் சற்குணங்களும் புத்திக்கூர்மையும் பேராண்மையும் ஒருங்கேமாயுமென்றும் கூறியிருக்கின்றனர். நிரப்புப்பிணிபற்ற நெட்டாற்றுச்சென்று கைநீட்டி யாசித்தேனும் திரவியந்தேடவேண்டியதவசரமென்றுகருதி

> அத்திட்டகூறையரைச் சுற்றிவாழினும்
> பத்தெட்டுடைமை பலருள்ளும்பாடெய்தும்
> ஒத்தகுடிப்பிறந்தக்கண்ணு மொன்றில்லாதார்
> செத்தபிணத்திற்கடை

என்று முன்னோர் வற்புறுத்திக் கூறினர்போலும். ஆகையால் பொருள் எவ்வளவுதான் துன்பத்திற் குறைவிடமாக விருப்பினும், பொருளில்லாதவன் ஜீவப்பிரேதமன்று, பிரேதத்தினுக்கீழ். மனிதருடைய சுகானுபவங்க

ளுக்குப் பொருளின்றியமையாத சாதனமென்று சிறுகுழந்தைகளுமறியும்படி, நாமிளமையிற்கற்கும் ஔவை "திரைகடலோடியுந் திரவியந்தேடு" என்று கூறினள். இதனால் செல்வத்தை இகழ்தல் சரியன்றென்பது நன்குவிளங்கும். ஆனால்செலவத்தின் பயனைவிளக்க நம்மனுபவமொன்றே போதுமானது. பொருளில்லாமல் கிடைக்கக்கூடியது ஒன்றுமில்லை; பொருளிருந்தால் எவ்வாறுசெம்பொறிவண்டினம் செந்தாமரையிடஞ்சேருமோ, அவ்வாறே சகலசுகிர்தங்களும் பொருளுடையோனை நாடும். தனவான் நட்பைவிரும்பாதார் பெரும்பான்மையுமில்லை.

உண்டாய போழ்தினுடைந்துழிக்காகம்போல்
தொண்டாயிரவர் தொகுபவே

ஆனால் வறுமைவந்தவிடத்து, அந்தோ, 'இலாஅஅர்க்கில்லைத்தமர்.' பிரபஞ்சத்தில் செல்வத்திற்கொப்ப ஆற்றலுடையது ஒன்றுமில்லையென்றே சொல்லலாம். "பணமென்றால் பிணமும் வாயைப்பிளக்கு"மானால் சதா ஊனுடைதேடி உய்யநேர்ந்த மானிடருக்குப் பணம் மிக்க அவசரமென்பது சொல்லாமலே தோன்றும். இயாவருஞ்செல்வஞ்சேர்க்கும் வழியைத் தேடிஅவரவர்கட்குவேண்டிய சுகானுபவங்களைப்பெறமுயன்றுவருகின்றனராயினும், செல்வத்தின் இலக்கணமியாவர்க்குந் தெரியுமென்று நினைக்கவிடமில்லை பிரதிதினமும் நாமொருபொருளைப்பார்ப்பதானாலும், அதைக் கவனிக்கவிசேஷகாரணமியாதேனும்நேர்ந்தாலன்றி, அதனிலக்கணம்நம்மனதிற் பதியாது. பிரபஞ்சத்திற் தோன்றும் பற்பலதோற்றங்களும் நாமெக்காலத்துங் கண்டனுபவமேயானாலும், அவைகளின் விசித்திரங்களை கவனித்தறிந்தவர் சிறுபான்மையரேயாம். ஆயிரக்கணக்காக மரங்களும் மலர்களும் நாம் பார்த்துளோமாகினும், அவற்றின் அங்கக்கூறு நம்மவருள் பெரும்பான்மையருமறியார். அதுபோலவே யாவரும் செல்வத்தை இடைவிடாது தொழுதேத்தி அப்பெரும்பேறடைய முயன்றுவருகின்றனராயினும்,செல்வத்தினிலக்கணம்யாவருமறிந்தமாட்டன்று. ஆங்கிலங்கற்காத தமிழ்க்கலையாற்றலுள்ளோர்களிடம், செல்வமென்றாலென்னை என்றொருவன் வினவினால், செல்வமின்னதென்றறியா இப்பேதை யார்கொலோ என்று வியந்து, அவர்கள் சிறுவயதிலே கற்ற நிகண்டிலிருந்து தக்கணமே

மறுவில் சேர்விபவமாடுவாழ்க்கையே விருத்தியாக்கம்
பொறியிடந்திருப்பெருக்கம் போற்றியவெறுக்கைசெல்வ

மென்றுரைத்துவிடுவார். ஆனால் இவ்விடையால் செல்வத்தின் இலக்கணம் விளங்கியதோ. ஆங்கிலம் படித்தவர்களில் அனேகர் அதே கேள்விக்கு,'தீர்த்தம்—தீர்த்தம், பிரசாதம்—பிரசாதம்'என்றுவிளக்கிய பண்டி

சத்தியவதி. *

நாடகப்பாத்திரங்கள்.

தனஞ்சயன்—மாளவநாட்டரசன்.
மனோதரன்—தனஞ்சயன்றன் இரண்டாம்பட்டத் தேவிக்கு மருமகன்.
மதனன்—சத்தியவதிக்குக் கணவனாகவரும் ஓர் பெருமான்.
வீரசேனன்—நாடுகடத்துண்ட ஓர் பிரபு.
சிங்கத்துவசன்— } தனஞ்சயன்றன் மக்கள், கடம்பனென்றும் வைரவனென்றும் மறைபெயர்பூண்டு, வீரசேனன்றன் மக்களெனக் கொள்ளப்படுபவர்.
மீனகேதனன்— }
சதானந்தன்—மதனனுக்கு நண்பன் } மகத நாட்டார்.
வக்ரசித்தன்—சதானந்தனுக்கு நண்பன் }
சதானந்தனுக்கு மற்றொரு நண்பனாகிய ஓர் காசிமீரநாட்டான்.
அயக்கிரீவன்—மகதப்படையின் தளகர்த்தர்.
ஓர் மகதநாட்டு மாலுமி.
இரண்டு மாளவநாட்டுத் தலைவர்.
விகடராமன்—மதனனுக்குச் சேவகன்.
ஓர் மருத்துவன்.
இரண்டு பிரபுக்கள்.
இரண்டு சிறைச் சேவகர்.
துடிலாதேவி—தனஞ்சயன்றன் இரண்டாவது பட்டத்தேவி.
சத்தியவதி—தனஞ்சயன்றன் முதற்பட்டத்தேவிக்கு மகள்
சந்திரோதயம்—சத்தியவதிக்குத் தோழி.

மற்றும் பிரபுக்கள், பெண்கள், மகதநாட்டு அமைச்சர், நீதிபர், ஓர் குறிசொல்வோன், ஓர் கூர்ச்சரநாட்டான், ஓர் நேபாள நாட்டான், பாடகர், உத்தியோகஸ்தர், போர்வீரர், தூதர், சேவகர் முதலாயினோர்.

---

* இஃது ஆங்கில மொழியில் 'ஷேக்ஸ்பியர்' என்னும் மகா நாடகப் புலவர் இயற்றியவையுள் ஒன்றாகிய 'ஸிம்பலின்' என்னும் மகா நாடகத்தின் மொழிபெயர்ப்பு: 'மயங்கு கட்டளைக் கலித்தொடர்' என்னும் நூதன யாப்பில் அமைக்கப்பட்டுள்ளது.

சத்தியவதி.

அங்கம். I.

பருவம் க-வது இடம்:—மாளவநாடு தனஞ்சயராஜனது
அரண்மனையைச் சார்ந்த ஓர் பூங்காவனம்.

பிரவேசம் — தினகரனும், சோமநாதனும்.

தினகரன்—களித்த முகத்தவரல்லால் ஒருவரும் தோன்றுகிலார்;
நமதரசன் நோக்கினைப்போல் சதா சுற்றுளார் நடிக்கும்
ஒப்பினும், நாம் நம் கிரகநோக்கின் வசந்தானும் நில்லோம்.

சோமநாதன்—ஆகில், இதற்கென்ன காரணமோ?

தினக— அரசன் மகளும்
அவரரசுக்குரியாளுமாம் பெண்ணைத் தமதிரண்டாம்
அரசி மருமகனுக்குக் கொடுக்க அரசன் எண்ண,
உத்தமனான மற்றோர் பெருமானை விரும்பி அவள்
வாக்களித்தாள்; அப்பெருமானும் நாட்டைக்கடந்துசெல்ல
ஏவல்கொண்டான்; சிறைகொண்டாள் அவள்: வெளிக்குத்
துயரே
யானதெல்லாம்; ஆகிலும் அரசன் நெஞ்சம் ஊடுருவி
யிருக்குமென்றே நினைக்கின்றேன்.

சோம— அரசர்க்கல்லால் மற்றோர்க்குமிராதா?

தினக—அவளை யிழந்தவனுக்குமுண்டு; அப்படியே
இக்கலியாணத்தில் பேராவல் வைத்த அரசிக்குமுண்டு;
ஆகில், அரசன்முகக்குறிக்கொத்து நடிக்கும் அவர்
பரிவாரத்துக்குள் ஒருவனும் தானிட்டுக்கொண்ட துயர்க்
கோலத்தின் ஏதுவுக்குள் மகிழாதவனில்லை.

சோம— அவ்வாறேனோ?

தினக—அரசகுமாரியைச் சேரப் பெறுதிருக்கு
மவன் தீய சொல்லெட்டாத் தீயவனே: அவள் தன் மனதைக்
கவர்ந்தவனோ—அருமந்த குணமைந்தனே! அதற்கா
யன்றோ அகற்றப்பட்டாய்—அவனுக்கிணையிக்கடல்சூழ்

செல்வியாள்.

அங்கம். I.

திரேதாயுகத்தில் இந்தியாவின் தென்கிழக்கில் "செல்விநாடு" என்றோர் இராச்சியமிருந்தது. இப்பொழுது எழுதப்பட்டிருக்கும் பூமிபடங்களொன்றிலும் இந்நாட்டின்பெயர்காணாது. பற்பலதேசத்தார்களாலும் அந்நாடுகவர்ந்துகொள்ளப்பட்டு ஏனை அரசாங்கநாடுகள் பலவற்றோடும் கலப்புண்டு போயிற்று. அஃது ஒருகாலத்தில நல்ல உன்னதமான நிலையிலிருந்ததுண்டு. அக்காலத்தில் குபேரனுடைய சம்பத்தும் அந்நாட்டின் சம்பத்தோடிணை பெறுததாயிருந்தது. இரப்போருங் கொடுப்போருமின்றி யிருந்த நாடுகளுள் அந்நாடு முன்னுடாயிருந்தது. அந்நாட்டின் தலைநகர் சுந்தரபுரி யெனப்படும். செல்வம் ஏராளமாயிருந்ததேனும் அங்குள்ளார் நாகரீகக்கலைகளில் அவ்வளவு தேர்ச்சியடைந்திலர். அதனால் அந்நகரியின் தெருவிலுள்ள வீடுகள், ஒழுங்கின்றி, ஒன்றன்மேலொன்று சரிந்து விழுந்துவிட எத்தனிப்பதுபோலும், ஒன்றன்காதில் மற்றொன்று ஏதோ இரகசியமான செய்தி சொல்லப்போவது போலும், உயர்ந்தும் தாழ்ந்தும் சரிந்தும் நிமிர்ந்தும் அமைந்து கிடந்தன. நேரான நடைவழிகள் காண்பதரிது. செப்பனிட்டபாதை இன்னதென்பது அந்நாட்டார்க்குத்தெரியாது.

இச்சரித்திரம் நடந்தகாலத்தில் அந்நாட்டை ஆண்டுவந்த அரசன்பெயர் "வீரசிங்கன்" என்றாகும். அவன் வயதிலும் அறிவிலும் முதிர்ந்தவனாயிருந்தமையால் அவன் குடைக்கீழ் வாழ் குடிகள் அவன் மீது அளவில்லா விசுவாசம் வைத்திருந்தார்கள். அவனும் மன்பதை மீது தண்ணளி சிறக்கச்சுரந்து அவரைப்பாதுகாத்துவந்தான். இவனது பட்டமகிஷி இறந்துபோய்ப் பதினைந்து பதினாறுவருஷங்களுக்குக் குறைவில்லை. அவள் சாங்காலத்தில் ஒருபெண்மகவைப்பெற்றனள். அவ்வா

சனுக்கு ஒரேபுக்திரிதான் உண்டு. அதனால் அந்நாட்டின் பெயரையே அப்புதல்விக்குமிட்டான். "செல்வி" எனும்பெயரிடப்பெற்ற இவள் சைசவமுதலிய பருவங்களைப்படிப்படியாய்க் கடந்துசென்று ஈசனருளால் யௌவனத்தை யடைந்தாள். இவள் அடிக்கடி தன்தந்தையுடன் குதிரையிவர்ந்து ஊர்வலம் வருவதும் அவர்போகும் பொதுச்சபைகளுக்கும் வேடிக்கைகளுக்கும் போவதும்வழக்கம். வனப்பில் இச்செல்விக்கிணை உலகிலெங்குமில்லை என்பது பிரசித்தம். சங்கீதம்சாகித்தியம சித்திரம் முதலிய நற்கலைகளில் அக்காலத்தார் மேம்படக்கூறும்படியான திறமையுண்டு. சிற்சிலவேளைகளில் இவள் தன்தோழிமார் ஏவற்பெண்கள் முதலியவர்களோடு வெளிப்புறப்பட்டுப் பவனி வருவதும் உண்டு. இவள் பிறவிச்சீமாட்டியாயிருந்தனள் எனினும் எல்லாவுயிர்களிடத்தும் அன்பும் அருளும் உடையவள். இவளையறியாதாரும் இவளுடன் கூடிப்பேசித் 'தம குறைக்குத் தீர்வுள்ளா'தாரும அந்நாட்டில் ஒருவரும் இல்லையென்று திண்ணமாய்க்கூறலாம். அக்காலத்தரசர்களும் அரசகுலத்துதித்தவர்களும் ஜனங்களுடைய மனத்திடையிருந்து அவர் குறைபாடுகளையுணர்ந்து அவற்றிற்கு அவர்சொலாமலே பரிகாரங்களைத் தேடிக்கொடுத்து அரசுமுறைசெலுத்தி எவரையும் இன்புறுத்தி வந்தனர்கள் என்பதை யார் அறியார்?

வீரசிங்கராசன் மதித்திறமையுடனும் நீதியுடனும் இருபத்தைந்து வருஷம் அரசாண்டு வருகையில் இந்நாட்டில் சண்டைச்சச்சரவுகள் எல்லாம் மறக்கப்பட்டன. குடிகள் எல்லாரும் எக்காலத்தும் இப்படியே சமாதானம நமது நாட்டில் குடிகொண்டிருக்குமெனில் நாம் எவ்வளவுமேன்மையும் சுகமும பெறலாம் என்று நினைத்து நினைத்துச் சந்தோஷப்படுமியற்கையுடையவராய் விட்டனர். எங்கும் சண்டையின்றிச் சாந்தியே பரவுதல்பெறவேண்டுமென்பதுதான் அவ்வரசனது கோட்பாடு. எங்குநோக்கினும்கைத்தொழிற்சாலைகளும்பாடசாலைகளும்காணலாம். வேதகோஷங்களும் வர்த்தகக்குழாங்களின் ஆர்ப்பும்எத்திசையினும்கேட்கலாம். வறுமையென்பதிந்நாட்டிலறுப்புண்ட காரணத்தால் வேறெந்நாட்டினும்போய்க் குடிகளைவருத்தத் திற

னின்றுயிற்று. இப்படியிருக்குநாளில் இந்நாட்டின் சிலைநகர்ப் பிறந்தவனாகிய ஒரு மனிதன், மெல்லமெல்ல, யாரும் அறியாமலும் ஒருவர்க்கும் சந்தேகிக்க இடங்கொடாமலும் தன்னதிகாரத்தைப் பெருக்கிக்கொள்வதற்கு வேண்டிய வழிகளைத் தேடிச்சேமித்துக்கொண்டான். அவன் காலவன் எனும்பெயரினன்; அரசனுக்கு முதல் மந்திரியாயும் ஆலோசனைத்தலைவனாயுமிருந்தவன்; இவன் இருண்டநிறமும் உருண்டவிழியுமுடையோன் எவரிடத்தும் பணிதலுடையவனைப்போல் நடிக்குமியல்புடையவன். மரியாதைமிக்குடையவன். அரசன் இவற்குப்பல வேளைகளில் பற்பல சம்மானங்கள் கொடுத்து இவன் வெற்றித்திறத்தைப் புகழ்ந்துவந்ததால் இவன்செல்வம்மிகுந்ததுடன் இவன்செல்வாக்கும ஊக்கம்பெற்றது. கோட்டைக்குவெளியில் அரசனது அரண்மனையைப்பார்க்கிலும் உறுதியான அரணொன்று இவனுக்குச் சொந்தமானதுண்டு. இவ்வரணை இவன் நாளுக்குநாள் பலப்படுத்திக்கொண்டுவந்திருப்பதுண்டு. இவன் அரணைக்காப்பதற்குப் பெருஞ்சைன்னியஞ் சேர்த்துவந்தபோதிலும் ஒருவரேனும இவன்கெட்டநோக்கத்துடன் இவ்வாறுசெய்துவருகிறான் என்று சந்தேகித்திருப்பதில்லை. தன்காரியத்தில் தளர்விலாக்கண்ணுடைய இவன்மிக்க சாமர்த்தியமும் சாதுரியமும் உடைமையால் இவன் உள்ளத்தின் தன்மையை எவரும் அறிந்திலர். சிற்சிலகாலங்களில் இவன் அரசன் முன்னிலையில் நின்று அவர்க்குப்புத்திமதி கூறிக்கொண்டிருக்கும்பொழுதே, "இவ்வரசன் திடீரென்று இறந்துபோவானாகில், என்னுடைய சேனையின் துணையைக்கொண்டு இச்சிங்காதனத்தை எளிதில் நான்கவர்ந்து கொள்ளலாமே;" என்ற எண்ணம் இவன் மனதிலுதிக்கும. இவ்வெண்ணம் பலமுறையுந் தோன்றிக் கடைசியில் இவனை இராசத்துரோகஞ்செய்யத் தூண்டுமாறுவன்மையுடையதாயிற்று.

செல்வியாளுக்குப்பதினோராண்டுநிரம்பிற்று. அரசனுடைய கிரகத்தில் கம்பீரமான பார்வையுடைய ஒரு சிறுவன் இருந்தான். அவனுக்கு அக்காலத்தில் பதினைந்து வயதிருக்கும். அவன பெயர் உக்கிரசேனன் என்பதாம. வீரசிங்க மகாராஜனுக்கு

ஓர் தம்பி இருந்தனன். அவன் இம்மகன் பிறந்த பிற்றைநாள் இறந்தபடியால் தன் தம்பிமகனைத் தானெடுத்து வளர்த்து அவனுக்கு வேண்டிய சகல சௌபாக்கியங்களையுந் தேடிவைத்துத்; தனக்குப்பின் அவனுக்கு முடிசூட்டிவிக்க நினைத்திருந்தான். அரசாளுதல் எளிதன்று என்பது அவ்வரசனுக்கு நன்றாய்த் தெரியுமாதலால் அவனை அரசுபுரியத் திறமுள்ளவனாகச்செய்வதற்காக அவனுக்கு மேலானகல்வி கற்பிப்பதே கடனெனக்கண்டு அவனைப் பல தேசங்களிலும் போய்ப் பல முறைகளையும் நேரிற்பார்த்து உலக இயல் கற்றுவருமாறு கட்டளையிட்டுத் தக்க ஏற்பாடுகள்செய் தனுப்பினான். அயல்நாடுகளுக்குப் போய் ஆங்காங்குள்ளவற்றைக் கற்று அரசுமுறை செய்யப் புகுவோனே நாட்டிற்கு மிக்க நன்மைவிளைப்பன் என்பது இவ்வரசனது திடமான நம்பிக்கை. பல தேயத்தரசர்களுக்கும் வித்வான்களுக்கும் மந்திரிகளுக்கும் சேனா நாயகர்களுக்கும் தன் கைப்பொ டிட்ட கடிதங்கள் வரைந்து விடுத்துத் தன் சகோதரன் மகனை யாதரித்து அனுப்புமாறு வேண்டிக்கொண்டனன்.

உக்கிரசேனன் சிறுவயதிலேயே செல்வியாள்மீது மிகநேசம் பாராட்டிவந்தான். அவள் வனப்பும் ஒழுக்கமும் எவரைத்தான் வசியம் செய்யாமற் போகும்? எதிர்காலத்தில் ஒருசமயம் இருவருங்கூடி அரசுபுரியுமாறு கடவுள் அருளுவார் என்ற எண்ணம் அரசன் மனதில் முற்பட்டு நின்றதுண்டு. இவ்விருவரும் சிறுவயதில் நேசத்தால் பற்பல விளையாடல்கள் செய்வதைக் கண்டு அரசன் உள்ளூற மிகக் களித்தான். இவர்கள் தன் நந்தவனத்தில் கைகோர்த்துக்கொண்டு உலாவுவதைக்கண்டும் ஒருவரோடொருவர் சம்பாஷிப்பதைக் கேட்டும் இவன் அடைந்த சந்தோஷத்திற் களவில்லை. இவர்கள் கூடிச்செய்யும் ஆலோசனைகளிவனுக்குச் சிற்சில சமயங்களில் பெரும் பொழுதுபோக்குக் கிடங்கொடுத்ததுண்டு. ஒருவர் அழகில் ஒருவர் ஈடுபட்டுச் செயலற்றுச் சிறிதுநேரம் மரத்தடியிலுட்கார்ந்து உள்ளூற இருவருங் களிப்படைவதை இவன் கண்டு களித்த காலம் பலவுள.

இப்படி இருவரும் அன்பின் தளையால் பிணிக்கப்பட்டிருந்ததால் உக்கிரசேனன் தேசயாத்திரை போகப்போகிறான் என்ப

ஜீவராசிகள்.

பறவைகள்.

---

1. இப்பூமியில் ஜீவராசிகள், மரம் செடி கொடி புல் முதலிய மரவர்க்கங்களாகவும் (Vegetable Kingdom) மனிதன் நாய் கோழி பாம்பு தவளை மீன் அட்டை நத்தை முதலிய மிருகவர்க்கங்களாகவும் (Animal Kingdom) இரண்டு பெரிய வகுப்புகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. இவ்விரண்டு பிரிவுகளிலும் அடங்கிய ஜீவராசிகளின் முக்கியமான பொது விலக்கணங்களாவன:—முதலாவது வளர்தல் அழிதல்; இரண்டாவது அவயவங்களை உடைத்தாதல், (உதாரணம்) மரத்திற்கு வேர் இலை கிளை முதலியனவும், மிருகத்திற்கு கண் காது கை கால் முதலியனவும் உறுப்புகளாம்; மூன்றாவது ஆகாரம் உட்கொள்ளல், (உ-ம்) மரம் தன் வேர் இலை முதலிய வழியாலும், மிருகம் தன் வாய் முதலிய வழியாலும், தங்களுக்குவேண்டிய உணவை ஸ்வீகரித்தல் உட்கொள்ளுதலாம்; நான்காவது சந்ததி விளைவித்தல், (உ-ம்) மிருகங்கள் குட்டிபெறுதலும் மரம் பெரும்பான்மையும் வித்துக்காய்த்தலும் சந்ததி உண்டாக்குதலாம். மிருகவர்க்கங்களின் பிரதானமுள்ள சிறப்பிலக்கணங்களில் பலவிடங்களுக்கும் தாமே போக்குவரவு செய்தல் முக்கியகுணமாகும். மரமானது தனவிடம் பெயர்ந்துதானே பிறவிடஞ்சென்று ஜீவியாது. மழைகாலங்களில் ஆற்றிலுண்டாகும் வெள்ளப்பெருக்கால் ஒருகரையிலுள்ள மரம் வேறொருகரைக்குக் கொண்டுபோகப்பட்டு அவ்விடத்தில் புதிதாக வேரூன்றி வளர்தலுமுண்டு. ஆனால் அது சுயமே போனதன்று. இங்கு எடுக்கப்பட்ட விஷயம் பறவைகளாதலின் இவ்விவரங்கள் தக்க சந்தர்ப்பங்களில் படிப்படியாய் இனிமேல் விவரிப்பாம். பறவைகள் மேற்கூறிய ஐந்து இலக்கணங்களுமுடையனவாய், ஒருவித வளையங்களாலமைக்கப்பட்ட அட்டைபுழுக்கள் போலாவது, மையத்தில் வாயுள்ள சொறி (Jelly Fish) போலாவதின்றி நாய் மீன் இவைகளைப்போல் முதுகெலும்புள்ளன. முதுகெலும்புள்ள பிராணிகள் கீழ்வரும் அநேக முக்கிய உட்பிரிவுகளாய் வகுக்கப்பட்டிருக்கின்றன; அவையாவன:—1 (முலைப்பாலுண்பன; (Mammals) உ-ம் மனிதன், நாய்; 2 பறவைகள் (Birds) உ-ம்-கோழி, கிளி; 3 ஊர்வன (Reptiles) உ-ம் ஓணான், பாம்பு, 4 இருவாழ்வுடை

யன (Amphibians) உ-ம் தவளை; 5 மீன்கள் (Fishes) உ-ம் சுறுமீன். இவற்றுள் முதலிரண்டு உட்பிரிவுகளிலுள்ள பிராணிகளுக்கு சூடுள்ள இரத்தமுண்டு. இறுதிமூன்று உட்பிரிவுக்கும் குளிர்ந்த இரத்தமுண்டு. நாய்முதலியன குட்டிகள்போட்டு முலைப்பாலூட்டி வளர்க்குமேதவிர முட்டைகள் போடுவனவல்ல. பறவைகள் முட்டைகள்போட்டு குஞ்சுகள் பொரித்து வளர்ப்பனவேயன்றி முலைப்பால்கொடுத்து வளர்ப்பனவல்ல. மேற்கூறிய பாகுபாட்டின் விவரங்கள் இப்போது போதும்.

2. ஆரம்பத்தில் சிலசந்தேகங்களை நிவிர்த்திசெய்வாம். மேற்றட்டுகள் பலவுடைய கோபுரங்களின் உட்புறங்களிலும், மிக்க உயர்வுள்ள அரசமரங்களிலும், ஆலயங்களில் எப்போதும் மனிதர் சஞ்சரியாத மாளிகைகளிலும், வௌவால்கள் குப்பிகள் (புட்டிகள்)போலத் தலைகீழாய்தொங்கும். அவற்றுட் சில ஒன்றோடொன்று சேட்டைசெய்து சீச் பீச் என்று சத்தமிடும். இவைகள் இராப்பொழுதில் திருடர்கள்போல ஆங்காங்குதிரிந்து பழவர்க்கங்களையும் சிற்சிலபூச்சிகளையும் கொள்ளைகொண்டு தின்று பொழுதுவிடியுமுன் தம்மிடங்குறுகி சாதுக்களென்று நினைக்கும்படி தூக்கம் பிடிக்கும். இப்போலிச்சாதுக்கள் முன் ஓர்காலத்தில் புள்ளினங்கட்கும் மிருகவினங்கட்கும் கடும்போர் நேர்ந்தபொழுது, மிருகங்கள் வெற்றி பெறும்போது தாங்கள் மிருகங்கள் என்றும் பட்சிகள் வெற்றி பெறுங்கால் தாங்கள் பட்சிகள்தாம் என்றும் இக்காலத்திலுள்ள மாந்தர்களைப் போல் வக்காலத்துகள் கொடுத்து வக்கீல்கள் ஏற்படுத்தாமல் தாங்களே தர்க்கித்தனவென்று ஓர் கதையுண்டு. இக்கதை வௌவால்களுடைய உறுப்புகள் மிருகங்களுக்குப் பொதுவானவையோ பறவைகளுக்குப் பொதுவானவையோ என்று ஐயுறத்தக்க விதத்திலிருக்கின்றனவென்று காட்டாநிற்கும். அதுநிற்க வௌவால்கள் ஆகாயத்தில் பறந்தபோதிலும் பறவையல்லவென்று சொல்லலாம். ஏனெனில் வௌவால்கள், பற்களும், நிமிர்ந்த காதுகளும், தோலியாலமைக்கப்பட்ட சிறகுகளுமுடையன. பறவைகளுக்கோ இரண்டு பாகமுள்ள (Parts) அலகுகளும் சதைக்குமேல் நிமிர்ந்து வளராத காதுகளும் தூவல்களால் அமைக்கப்பட்ட சிறகுகளுமுண்டு. மேலும் வௌவால்கள் குட்டிகள் ஈன்று அவற்றிற்கு முலைப்பால் கொடுக்குமே ஒழிய முட்டைகள்போட்டு அடைகாத்து குஞ்சுபொரிப்பனவில்லை. ஆகவே வௌவால்கள் விலங்கு வர்க்கத்தில் முதுகெலும்புள்ளன என்னும் பிரிவில் முலைப்பாலுண்பனவாகிய உட்பிரிவில் சேர்ந்தனவாகும்.

இந்திர வில்போன்ற கண் கவரும் பலநிறமுடைய வண்ணாத்திப் பூச்சிகளையும், ரீம் என்று சத்தமிட்டுப் பறந்துவரும் வண்டுகளையும் இவையன்றித் தட்டான் பூச்சி, கடந்தை, ஈ, ஈசல், கொதுகு முதலியவற்றையும் வெட்டுக்கிளிகளையும் (Grass-hoppers) பறவைகள் என்று நினைத்து சிலர் மயங்குகிறார்கள். ஆனாலிவற்றிற்கும் பறவைகட்கும் வேற்றுமை சிறிதன்று; இவற்றிற்கு முதுகெலும்பில்லை. ஒருவிதமான வளையங்களும், சாதாரணமாக ஆறு கால்களும், நாலு சிறகுகளும் உடையனவாகும். 'பூநக்கி ஆறுகால்' (அதாவது பூவைநக்கும் வண்டிற்கு ஆறுகால்) என்று சப்த சிலேடையாக புலவரும் பாடியிருக்கிறார். மற்றவேற்றுமைக்குணங்களை ஈண்டுவிரிக்கிற்பெருகும்.

3. மனிதர்கள் பட்சிகளை அவற்றின் இனியகீதத்திற்காகவும், அழகுவாய்ந்த தூவல்களுக்காகவும், மாம்சத்திற்காகவும், பிடித்து வீட்டில் சிறைசெய்தும், பழக்கியும், வருகிறார்கள். பறவைகள், விடியற்காலங்களிலும், சாயங்காலங்களிலும், மற்றச்சமயங்களிலும், இலை அடர்ந்து இருளுண்டாகும்படி தழைத்த ஆலமரச் சோலைகளிலும், ஆகாயம்போன்று, நீல நிறம்வாய்ந்து, கடல்எனவிரிந்து, ஜில் என்ற ஜலம்நிறைந்த தடாகக்கரையிலும், பச்சைப்பசேர் எனும் புற்பூண்டுகள் செறிந்து நிசப்தமான மலைச்சார்புகளிலும், பன்னிறப்பூக்கள் மலர்ந்து, நறுநாற்றம்வீசும் செடி கொடி மரம் இவை ஒருங்கேகலந்து வளரப்பெற்ற, பால்நிறமுள்ள மணற்புறங்களிலும் பலவிதமான பறவைக்கூட்டங்கள் அணி அணியாய் உட்கார்ந்து பல்வேறுதொனி உண்டாகும்படி பாடுவதைக் கேளாதார் யாவர்? கேட்டும் மனங்களியாதார் யாவர்?

4. பட்சிகளின் உறுப்புக்களும் அவற்றின் தொழில்களும் என்னவென்று பார்ப்போம். அவை கொம்புபோலும் வலிமையுடைய ஒருநுனிப்புள்ள அலகும் (Beak), தூவல்களும், இரண்டுகாலும், இரண்டுசிறகுகளுமுடையன. அலகுகள் சிறியனவாயும் பெரியனவாயும் பலநிறமாயும் ரூபம் சிறிதுவேறுபாடாயும் பெரும்பான்மையும் நீண்டு கூரியனவாயுமிருக்கும். அலகுகளின் பலவிதவேறுபாடுகளைக் காட்டும்படி திருவனந்தபுரம் காட்சிபங்களாவில் மாளிகைக்குள் அநேக பட்சிகளின் அலகுகள் ஒருமித்துச்சேர்த்து வைக்கப்பட்டிருக்கின்றன. நமது கையும் வாயும் செய்கின்ற தொழில்களை பட்சிக்கு அலகு செய்கின்றது. அத்தொழில்கள் ஆகாரத்தைப் பிடிப்பதும் உட்கொள்ளுதலுமாகும். அலகு அல்லது மூக்கு மிகவும் பெரிதாயுள்ள ஆரன்பில் (Hornbill) எ

ன்னும் பட்சி ஜீவனோடு திருவனந்தபுரம் காட்சிபங்களாவில் வைக்கப் பட்டிருக்கின்றது. இது தன்தலையை மேலும் கீழும் ஆட்டும்பொழுது லொட லொடவென்னுஞ் சத்தமுண்டாகின்றது.

5. பறவைகளின்மேல் வளரும் தூவல்கள் பல் வேறுவிதம். இரண்டு இறகுகளிலும் ஒருவிதமான பெரியதூவல்களும், வால்பக்கத்தில் பெரும்பான்மையும் நடுத்தரமான தூவல்களும், நெஞ்சு, கழுத்து. தலையிலிருக்குங்கொண்டை. சிறகின் கீழ்ப்பக்கம் இவ்விடங்களில் மிகவும் மிருதுவான சிறிய தூவல்களும் முளைக்கின்றன. சில பட்சிகளுக்கு தூவல்கள் ஒவ்வொருகாலத்தில் உதிர்ந்து மறுபடியும் புதிதாக உண்டாகின்றன. சில பறவைகளுக்கு வேனிற்காலத்தில் தூவல் வேறு மழைகாலத்தில் வேறு. நிறமும் சிறிது வேறுபடுகின்றது. தூவல்கள் பறவைகளுக்கு உஷ்ணம், குளிர்ச்சி இவை அதிகரியாதபடி பாதுகாக்கும் முக்கிய கருவியாகும் ஆனாலவை பறவைகளின் பந்துத்துவத்தை வெளியாக்குவதற்கு தலைமையான சாதனமென்று அங்கீகரித்தல் கூடாது. மனிதர்களுடைய தோல் எவ்விதம் ரோமமாகவும், விரல் நகங்களாகவும், ரூபம் வேறுபட்டு வளருகின்றதோ, அவ்விதமே பட்சிகளுடைய தூவல்களும் அவற்றின் தொலியின் வேறுபாட்டால் அமைக்கப்பட்டிருக்கின்றன. தூவல்களுக்கு கறுப்பு வெள்ளை சிவப்பு மஞ்சள் நீலம்முதலிய நிறங்கள் அவற்றிலுள்ள பிக்மென்று (Pigment) என்னும் வஸ்துவின்குணத்தால் உண்டாகின்றன. நிறம் ஆகாரத்தால் வேறுபடும் என்று மிஸ்டர் இவான்ஸ் (Evans) துரை சொல்லுகிறார். தூவல்களின் வெள்ளைநிறம் பிக்மென்று (Pigment) என்னும் வஸ்து அவற்றில் இல்லாமையை உணர்த்தும். இதுசம்பந்தமாய் நாம் கவனிக்கவேண்டியது யாதெனில் மற்றைப்பிராணிகளைப்போல பறவைகளுக்கும் நிறம் நிலைபெற்ற பண்பு அன்று. ஆகவே காக்கைக்கு கறுப்புநிறம் இன்றியமையாததென்று நினைத்து இனிமேலாவது 'வெள்ளைக்காக்கை' என்பதை 'ஆகாசமலர்' 'கானல்ஜலம்' என்றபீ அர்த்தத்தில் சொல்லுவதற்கிடமில்லை. வாஸ்தவத்தில் வெள்ளைக்காக்கை ஒன்று பங்களூர் (Bangalore) காட்சிபங்களாவில் வைக்கப் பட்டிருக்கிறதென்று சொல்லுகிறார்கள்.

சமாசாரக்குறிப்புகள்.

செவ்வாய் (Mars) என்ற கிரகத்திலின்றும் வருஞ்செய்தி:—மேற்குறித்த கிரகத்தில் ஜனங்களிருப்பதாகக் குறிப்பிக்கும் விசேஷத்தைப் பற்றி மாற்றின் (Matin) என்னும் பத்திரிகையில் கீர்த்திபெற்ற பிரஞ்சு வானசாஸ்திரி (French Astronomer)யாகிற கனம் வில்பிரட்டிபான் வீல் (M. Wilfred de Fonvielle) எழுதியிருக்கின்றார். தாம்கண்ட காட்சியானது அந்தக்கிரகத்தில் ஜனங்கள்வசிப்பதை நிலைநாட்டுகின்றதெனக்கூறுகின்றார். இக்காட்சியினை முதல்முதல் கண்டவர் ஒரிசோனு (Orizona) என்னுமிடத்திலிருக்கும் ஹார்வெர்ட் நட்சத்திரசாலையில் வானசாஸ்திரியாயிருக்கும் எம். டக்லஸ் (M Douglas) என்பவரே. அவரால் இக்காட்சிகாணப்பட்டு லீல், பாரிஸ் முதலான இடங்களிலிருக்கும் நட்சத்திரசாலைகளுக்குஅதன் சமாசாரமனுப்பப்பட்டது. செவ்வாயில் ஓர் புறமிருக்கும் ஐக்கேரியன்கடல் என்னுமிடத்தை எம். டக்லஸ் உற்றுப்பார்த்துக்கொண்டிருந்த சமயத்தில் எத்தனையோ நூறுமைல் தூரமுள்ளதாய், நேரான வரியுடையதாய், ஒரு பெருந்தீ 1-மணி 10-நிமிஷம் வரையிலும் இடைவிடாதெரிந்து பின் திடீரென அணைந்ததாகக்கண்டார். அத்தீ ஒழுங்காக எரிந்ததனாலும்சிலநேரத்துக்குள்த்தோன்றி மறைந்ததனாலும் செவ்வாயிலிருக்கும் மனிதர்களாலேயே கொளுத்தப்பட்டிருக்கவேண்டுமென்று எம். டி. பான்வீல் ஊகிக்கின்றார். இஃது உண்மையாயின் செவ்வாய் கிரகத்திலிருக்கும் நம் சகோதரர்களோடு சில அடையாளங்களைக் கொண்டாவது உரையாடுவதற்கு நம்முள் யார்தான் ஆசைப்படார்கள். ஆனால் நமது அடையாளத்தின் பொருளை நாமறிவதுபோலவே அங்குள்ளாரும் அறியச்செய்தற்கு முன்வருபவர் யாவரோ ?

* * *

ஒரு அதிவிநோத இரட்டைப்பிறப்பும் சாஸ்திரப்பிரயோகமும்:—பிரசில் என்ற தேசத்தில் மேரியா என்றும் ரோஸலீனு என்றும் பெயரையுடைய இரட்டைக்குழந்தைகள் மார்பினிடம் பின்னி ஓர் உருவமாய்ப் பிறந்தன. சயாம் என்ற இடத்துற் பிறந்த இரட்டைக்குழந்தை பக்கப்பின்னுதல் பெற்றிருந்ததால் இஃது அதிலிருந்து வேறுபாடுடைய ஜாதியாய் மதிக்கப்பட்டது. ரையோஜினீரோவிலிருக்கும் டாக்டர் ஆன்வரரோரோமாஸ் என்பவர் இவ்விரட்டையைப் பிரிக்கச் சாஸ்திரப் பிர

யோகஞ்செய்யத் தொடங்குகையில் இவ்விரண்டு குழந்தைகளுக்கும் சுவாசாசயம் ஒன்றாயிருப்பதைக் கண்டார். அதனைப் பிரித்துவிட்டாலன்றி இவை வெவ்வேறாய்ப் பிரிந்து வாழ்வதரிதென்று தெரிந்துகொண்டார். இப்பொழுது ரையோஜினீரோ வைத்தியபாடசாலையிற் பிரசங்க நிபுணராகிய டாக்டர் செம்பாட்டு பிரீவாஸ்ட் என்பவர் சுவாசாசயத்திற்குக் கேடுவராமல் பிரித்துவிட்டனராம். ஒரு நாயை முன்னுறச் சோதித்துப்பார்த்தார், அதன் சுவாசாசயத்தைக் கீறி உடன் அதை ஆற்றினார். இப்படியே இவ்விரட்டைக் குழந்தையின் சுவாசாசயத்தைக் கீறினால் அதனிடத்துண்டாகும் புண்ணையும் ஆற்றிவிடலாமென்று அறிந்துகொண்டார். பிற்பட அக்குழந்தையின் மூளையின் தன்மைகளையும் உடலின் தன்மைகளையும் தெளிவாய்க் கற்றறிந்தார். அறுப்பதனால் உண்டாகும் புண்ணினிடத்திற் சிற்றுயிர்ப் பிராணிகள் (Bacteria) விளையாது தடுப்பதற்குவேண்டிய காப்புக்களை நன்கு தேடிக்கொண்டபின் சத்திரத்தை எடுத்துக் கையாட்சிசெய்யும் தன் உதவி வைத்தியர்களைச் சுத்திவருத்துதற்குச் சிற்சில பிணிவிலக்கி மருந்துகளைக்கொண்டு குளிப்பித்தார். இவர்களைச் சஸ்திரப்பயிற்சிசாலைக்குள் பிரவேசிப்பதற்குமுன் புதிய ஆடைகள் புனைவித்தார். அக்குழந்தைகளையும் சோப் முதலியவற்றாற் குளிப்பித்துப் புதிய உடை உடுப்பித்தார். கடைசியாய் மிக்க கவனத்துடன் சுவாசாசயத்தைக் கருவியாடிவிட்டார். மேரியா சிறிதுநாள் இருந்து இறந்தாள். ஆயினும் ராஸலீனு சௌக்கியமாயிருக்கிறாளாம். டாக்டருடன் அவள் போர்டேர்வுக்குப் போயிருக்கிறாள்போலும்.

* * *

சீயம் (Siam) தேசத்தில் வருடங்களுக்கும், மாதங்களுக்கும் யானை, சிங்கம், நாய், கோழி, எலி, பூனை எனப் பெயர் வைத்திருக்கிறார்கள். யானைவருடத்திற் பிறந்தவன் சிங்கவருடத்திற் பிறந்த பெண்ணை விவாகிக்கக்கூடாதாம். பூனைவருடத்திற் பிறந்த பெண்ணை எலி வருடத்திற் பிறந்தவன் விவாகிக்கக்கூடாதாம். எவ்வளவோ நாகரிக மிக்க இக்காலத்தில் இஃது விந்தையினும் விந்தையன்றோ?

,, E. சுப்பராயமுதலியார் அவர்கள்,
வக்கீல்
ஸ்ரீவைகுண்டம்.

,, சந்திரபானுலாலா அவர்கள்,
Irrigation Supervisor,
நாகர்கோவில்.

,, A. சின்னசாமி நாயுடு அவர்கள்,
சிந்துபூந்துறை
திருநெல்வேலி.

நமது பத்திரிகாபோஷகர்கள் வரவு.

				ரூ.
ஸ்ரீமான், வேதாத்ரீச தாச முதலியார் அவர்கள்	...	...	...	20
,, T. பொன்னம்பலம்பிள்ளை அவர்கள்	...	...	...	15

சந்தா வரவு.

	நம்பர்			ரூ.
ம-ா-ா-ஸ்ரீ	61.	வைரவன் பண்டாரம் அவர்கள்	,,	2
,,	10.	சு. பழனியாபிள்ளை அவர்கள்	,,	2
,,	27.	கி. மீனாட்சிஐயர் அவர்கள்	,,	2
,,	6.	வி. பி, அனந்தராமன்பிள்ளை அவர்கள்	,,	2
,,	8.	கொச்சுமணிப்பிள்ளை அவர்கள்	,,	2
,,	32.	சு. முத்துக்குமாரசுவாமிப்பிள்ளை அவர்கள்	,,	2
,,	37.	கைலாசம்பிள்ளை அவர்கள்	,,	2
,,	28.	V. S. வைத்தியநாதசாஸ்திரிகள்	,,	2
,,	66.	T. S. பத்மநாபபிள்ளை அவர்கள்	,,	2
,,	4.	எம். சுப்பிரமணியபிள்ளை அவர்கள்	,,	2
,,	40.	B. S. பாலகுருசெட்டியார் அவர்கள்	,,	2
,,	78.	பூதநாதபிள்ளை அவர்கள்.	,,	2
,,	79.	சாமிப்பிள்ளை அவர்கள்	,,	2
,,	80.	K. P. மாதேவன்பிள்ளை அவர்கள்	,,	2
,,	39.	நா. ரெ. சுப்பய்யாவையர் அவர்கள்	,,	2
,,	72.	மி. சங்கரபாண்டியன்பிள்ளை அவர்கள்	,,	2
,,	30.	பி. ஐயம்பெருமாள்பிள்ளை அவர்கள்	,,	2

,,	31.	பி. மாணிக்கவாசகம்பிள்ளை அவர்கள்	,,	2
,,	17.	வி. சுப்பராயமுதலியார் அவர்கள்	,,	2
,,	134.	சிதம்பரநாதபிள்ளை அவர்கள்	,,	2
,,	131.	சடைமுத்துப்பிள்ளை அவர்கள்	,,	2
,,	132.	சு. அருணாசலநப்பனார் அவர்கள்	,,	2
,,	135.	R. நாராயணசாமிஜெட்டியார் அவர்கள்	,,	2

நமது பத்திரிகைக்கு விஷயதானம் செய்பவர்களிற் சிலர்.

ம. ா-ா-ஸ்ரீ. கே. ஜி. சேஷய்யர் அவர்கள் B. A., B. L.

,, எஸ். அனவரதவிநாயகம்பிள்ளை அவர்கள் M. A.

,, G. சுப்பராய முதலியார் அவர்கள்

,, ஏ. கே. கிருஷ்ணஐயங்கார் அவர்கள்

,, சிவராஜபிள்ளை அவர்கள் B. A.

,, M. மூத்துராமலிங்கம்பிள்ளை அவர்கள் B. A.

,, S. கணபதிப்பிள்ளை அவர்கள்

,, M. R. கிருஷ்ணராவ் அவர்கள்

,, வெங்கிடேசுவரஐயர் அவர்கள் B. A.

,, இராஜாங்கம்ஐயர் அவர்கள் B. A.

,, லக்ஷ்மணபிள்ளை அவர்கள் B. A.

,, கோலப்பபிள்ளை அவர்கள் B A.

,, A. நமசிவாயம்பிள்ளை அவர்கள் B.A.

,, கணபதிப்பிள்ளை அவர்கள் B. A.

,, தி. ப. சிவராமபிள்ளை அவர்கள்

,, மு. பொ. ஈசுவரமூர்த்திப்பிள்ளை அவர்கள்

,, கோபாலகிருஷ்ணஐயர் அவர்கள்

,, இராமகிருஷ்ணஐயர் அவர்கள் B. A.

,, ஞானசிகாமணிமுதலியார் அவர்கள் B. A.

,, இராமசுவாமிஐயர் அவர்கள் B. A, B. L.

,, அ. குமாரசுவாமிப்பிள்ளை அவர்கள், வித்வான்

சுன்னாகம், யாழ்ப்பாணம்.